விழுப்புரம் மாவட்டம் விழுப்புரம் வட்டம் கோலியனூர் ஊராட்சி ஒன்றியம் கோலியனூர் கிராமம் மற்றும் கோலியனூர் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை:

ஊராட்சி மன்ற தலைவர்.திருமதி. V.கண்மணி

தீர்மானம் எண்:4/2024 நாள்:16.02.2024

பொருள்: உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு - விழுப்புரம் மாவட்டம் - விழுப்புரம் வட்டம் - கோலியனூர் ஊராட்சி ஒன்றியம் - கோலியனூர் ஊராட்சி மற்றும் கிராமம் - சர்வே.எண்- **447/2, 447/3, 447/4A, 447/5, 447/6A, 448/1B, 448/1C, 448/2A1, 448/2B1, 448/3, 448/4A, 449/1, 449/2 –** 3.24 ஏக்கர் (அ) (13, 115 ச.மீ) — பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள **மருதநாயகம் நகர்(MARUDHANAYAGAM NAGAR)** குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப இறுதி ஒப்புதல் - வழங்குதல் குறித்து

பார்வை:

1. மனுதாரர் திரு. R.ராசையன் மற்றும் R.கோவிந்தன் கிழக்கு பாண்டி ரோடு மகாராஜபுரம் விழுப்புரம் அவர்களின் விண்ணப்ப நாள்:11.02.2024
2. அரசாணை எண்:79 மற்றும் எண்:18 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்:23.09.2020, 04.02.2019.
3. நகர் ஊரமைப்பு இயக்குநர் விழுப்புரம் மாவட்டம் அவர்களின் ந.க.எண்: DXT30PYC/2024/TCP(02/02/2024)
4. கோலியனூர் ஊராட்சி தீர்மான எண்:4 நாள்:13.02.2024
5. தானப்பத்திரம் எண்:136/2024 நாள்:11.01.2024
6. நில பயன் மாற்று கட்டணம் செலுத்து ரசீது எண்: 20240209054528 **Ref No: YIC42229495476** மற்றும் கூராய்வு கட்டணம் செலுத்து ரசீது எண்:1701

உத்தரவு:

உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு - விழுப்புரம் மாவட்டம் - விழுப்புரம் வட்டம் - கோலியனூர் ஊராட்சி ஒன்றியம் - கோலியனூர் ஊராட்சி மற்றும் கிராமம் - சர்வே.எண்- **447/2, 447/3, 447/4A, 447/5, 447/6A, 448/1B, 448/1C, 448/2A1, 448/2B1, 448/3, 448/4A, 449/1, 449/2 –** 3.24 ஏக்கர் (அ) (13, 115 ச.மீ) — பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள மருதநாயகம் நகர்(**MARUDHANAYAGAM NAGAR**) குடியிருப்பு

மனைப்பிரிவுகளாக பிரித்திட பார்வை -1ல் காணும் அரசாணையில் தெரிவித்துள்ள வழிகாட்டி நெறிமுறைகளின் படி பார்வை-(2)-ல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் , விழுப்புரம் மாவட்டம் அவர்களின் நடவடிக்கையின் வாயிலாக ஒப்புதல் கடிதம் வரப்பெற்றுள்ளது.

பார்வை(3)-ல் மற்றும் (4)-ல் காணும் ஊராட்சியின் தீர்மான மற்றும் உதவி இயக்குநர் கடிதம் படி அமைந்துள்ள இடத்தினை ஸ்தல ஆய்வு செய்து மனை பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்குமாறு தெரிவித்துள்ளனர்.

பார்வை(6)-ல் காணும் விவரம் படி புன்சை வகைப்பாட்டில் இருந்து மனையாக மாற்ற அனுமதி கோரும் இடத்தின் சந்தை மதிப்பில் 3% தொகை நில பயன்மாற்றக் கட்டணமாக உரிய அரசு தலைப்பில் **(0217 Urban Development – 60 other Urban development scheme – 800 other receipts – As Receipts under Land use Non Taxation fees – 09 Collection (DPC:0217-60-800-AS-22709))** செலுத்தி அதற்குண்டான கட்டணம் **ரூ.82700/- State Bank of India - Challan No:** 20240209054528 **– Bank Ref No – YIC42229495476** வங்கி கிளையில் செலுத்தி அதற்கு உண்டான ஆவணங்கள் கட்டணம் செலுத்தப்பட்டு உத்தேச மனை பிரிவுக்கு கீழ்க்கண்ட இறுதி ஒப்புதல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மனை பிரிவுக்கு இணைப்பிலுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின் படி **மருதநாயகம்** நகர்(**MARUDHANAYAGAM NAGAR**) என்ற பெயரில் ஒப்புதல் வழங்கப்படுகிறது. இணையதளம் வாயிலாக ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரை படத்திற்கு மேற்படி கோலியனூர் ஊராட்சி மன்ற தீர்மான எண்:4/2024 என எண்ணிடப்பட்டு அசல் வரைப்படங்கள் மற்றும் ஒப்புதல் ஆணை நகல் இத்துடன் அனுப்பிவைக்கப்படுகிறது.

உள்ளாட்சியின் இறுதி ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட நகர் ஊரமைப்பு மற்றும் பத்திரப்பதிவு அலுவலகத்திற்கும் நில அளவை துறைக்கும், தகவலுக்கும், உரிய நடவடிக்கைகும்
அனுப்பிவைக்கப்படுகிறது.

சிறப்பு நிபந்தனைகள்:

1. மனைப்பிரிவுகள் சாலைகள் அனைத்தும் மனைப்பிரிவு வரைபடத்தின் படி உள்ளாட்சி சட்டங்களின் படி சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அபிவிருத்திக்கு எடுத்தக்கொள்ளப்படும். மேலும் பொது துறையிலிருந்து (Public Road) மனுதாரர் மனைப்பிரிவு அமையும் இடம் வரை அணுகு சாலையாக காட்டப்பட்டுள்ள சாலைப்பகுதியை உள்ளாட்சி தனது பொறுப்பில் எடுத்துக்கொள்ளும்.

2. மனைப்பிரிவு வரைபடத்தின் மனைப்பிரிவு சாலையும் OSR மற்றும் பொது ஒதுக்கீடு இடங்கள் இருப்பின் அதனையும் மனைப்பிரிவு வரைபடம் மற்றும்

தானப்பத்திர நகலுடன் சம்பந்தப்பட்ட வட்டாட்சியருக்கு, அனுப்பி வருவாய் ஆவணங்களில் உட்பிரிவுடன் தகுந்த பதிவுகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

3. நகர் ஊரமைப்பு அனுமதி வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தின் அலுவலக அனுமதியின்றி மாற்றம் செய்யக்கூடாது.

4. சாலையின் இருபுறங்களில் 10 அடி இடைவெளிக்கு ஒன்று மரம் நட்டு பராமரிக்கப்பட்ட வேண்டும்.

மேற்கண்ட நிபந்தனைகளை மீறும் பட்சத்தில் இந்த உத்தரவு எப்போது வேண்டுமானாலும் ரத்து செய்யப்படும். மேற்கண்ட நிபந்தனைகளுக்கு உட்படும் கோலியனூர் ஊராட்சி மற்றும் கிராமம் - சர்வே.எண்- **447/2, 447/3, 447/4A, 447/5, 447/6A, 448/1B, 448/1C, 448/2A1, 448/2B1, 448/3, 448/4A, 449/1, 449/2** – 3.24 ஏக்கர் (அ) (13, 115 ச.மீ) – அமைந்துள்ள 76 மனைகளுக்கு மட்டும் ஒப்புதல் அளித்து உத்திரவிடப்படுகிறது.

இணைப்பு:

வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள்

தலைவர்
முதல் நிலை ஊராட்சி
கோலியனூர் ஊராட்சி

பெறுநர்

ஆர் ராசையன்

ஆர் கோவந்தன்

861 கிழக்குபாண்டி ரோடு

மகாராஜபுரம் விழுப்புரம்.

நகல்: வட்டார வளர்ச்சி அலுவலகர் கிராம ஊராட்சி கோலியனூர் ஒன்றியம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.

நகல்: உதவி இயக்குநர் நகர் ஊரமைப்பு விழுப்பரம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.

நகல்: உதவி இயக்குநர் ஊராட்சிகள் விழுப்புரம்

நகல்: சார்பதிவாளர் வளவனூர் விழுப்புரம் மாவட்டம்

நகல்: வட்டாட்சியர் விழுப்புரம்

உத்தரவு

நகர் ஊரமைப்பு துறை இயக்குனர் விழுப்புரம் மாவட்ட அலுவலரின்
மனைப்பிரிவு கோலியனூர் கிராம "மணிமாலை நகர்" சர்வே எண்: 447/2, 447/3
447/4A, 447/5, 447/6A, 448/1B, 448/1C, 448/2A1, 448/2B, 448/3, 448/4A, 447/1, 449/2-ல்
3.24 ஏக்கர் (13115 ச.மீ) கொண்ட மனைப்பிரிவு
ஊராட்சி தீர்மான எண்: 4 நாள் 13-02-2024-படி
மனைப்பிரிவு அங்கீகரிக்கப்படுகிறது.

தலைவர்
முதல் நிலை ஊராட்சி
கோலியனூர்.



அலுவலர் உதவி வரைவாளர்

Signature Valid
Signed by: Assistant
Location: Villupuram

மேற்பார்வையா